# என்எஸ்எஸ் திட்டத்தில் முகக் கவசங்கள் விநியோகம்

திருச்சி, செப். 27: திருச்சி சாரநாதன் பொறியியல் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பில், பொதுமக்களுக்கு இலவச முகக் கவசங்கள் விநியோகிக்கப்பட்டன.

மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், நாகமங்கலம் ஊராட்சி, காந்திநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நாகமங்கலம் ஊராட்சித் தலைவர் வெள்ளைச்சாமி தலைமை வகித்து பொதுமக்களுக்கு முகக் கவசங்களை வழங்கினார். தொடர்ந்து இது போல சமூகப் பணியில் ஈடுபடும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களைப் பாராட்டினார். திட்ட அலுவலர் மு. கார்த்திகேயன் முன்னிலை வகித்தார்.



நாகமங்கலம் பகுதியில் பொதுமக்களுக்கு முகக் கவசம் விநியோகிக்கும் சாரநாதன் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்.